Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20170126T

## வறுமையை எதிராக போராட இணைந்த தீர்வுகளை நாடும் Millennium Challenge Corporation (MCC)

**கொழும்பு, ஜனவரி 26:** பொருளாதார வளர்ச்சியின் ஊடாக வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளை கலந்துரையாடுவதற்கு இந்த வாரம் வருகை தந்திருந்த Millennium Challenge Corporation (MCC)இன் சிரேஷ்ட அதிகாரிகளின் மூன்று நாள் விஜயம் நிறைவடைந்தது. கொழும்பில் இலங்கையின் அரசாங்க அதிகாரிகள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறையின் தலைவர்களை சந்தித்ததுடன், கிளிநொச்சியில் வெற்றிகரமான வர்த்தகங்களையும் பிரதிநிதிகள் குழு சென்று பார்வையிட்டது.

*“MCC உடன்படிக்கைக்கு இலங்கை தெரிவு செய்யப்பட்டமையானது நாட்டில் நீதியான மற்றும் ஜனநாயக ஆட்சி, பொருளாதார சுதந்திரம் வலுப்படுத்தப்படல் மற்றும் மக்களில் முதலீடு செய்தலில் நாடு வெளிப்படுத்திய தேர்ச்சியின் சான்றாகும்”* என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் தெரிவித்தார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் செழுமையை அதிகரிக்க உதவுவதற்கு உள்ளக ரீதியில் வழிநடத்தப்படும் தீர்வுகளில் MCC செயற்பாடுகள் தங்கியுள்ளன. நல்லாட்சி, ஜனநாயக உரிமைகளை மதிப்பதில் ஊழலுக்கு எதிராக போராடல் என்பன உள்ளடங்கலாக கடும் தரங்களின் அடிப்படையில் நாடுகள் தெரிவு செய்யப்படுகின்றன.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, வெளிவிவகார பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, தொழிற்றுறை அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன ஆகியோரை சந்தித்து இலங்கையின் பொருளாதார வளர்ச்சி முன்னுரிமைகள் தொடர்பில் MCC அதிகாரிகள் கேட்டறிந்தனர். தனியார் முதலீடுகள் எவ்வாறு இலங்கையின் அபிவிருத்தி குறைந்த பகுதிகளில் தொழில்களை, வாழ்க்கைத் தொழில் பயிற்சிகளை மற்றும் கல்வி சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளன என்பதனை அறிந்து கொள்வதற்கு கிளிநொச்சியில் கார்கில்ஸ் மற்றும் மாஸ் ஹோல்டிங்ஸ் தொழிற்சாலைகளுக்கும் பிரதிநிதிகள் குழு விஜயம் செய்தது.

*“MCCஉடன் பங்காளித்துவத்தில், எதிர்கால வளர்ச்சிக்கு சந்தர்ப்பமளிப்பதற்கு, இலங்கையர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு இலங்கைக்கு இது மிகவும் முக்கியமான தருணமாகும்”* என MCCஇன் உடன்படிக்கை செயற்பாடுகளுக்கான பிராந்திய பிரதி உதவித் தலைவர் ஃபாதிமா சுமார் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு டிசம்பரில், MCCஇன் பணிப்பாளர்கள் சபையினால் ஐந்து வருட நன்கொடைக்கான MCC உடன்படிக்கைக்கு தகுதியானதாக இலங்கை தெரிவு செய்யப்பட்டது. நிலையான வறுமை ஒழிப்பு வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கு உகந்த சாத்தியமான செயற்றிட்டங்களை MCC மற்றும் இலங்கை அரசாங்கம் என்பன மதிப்பீடு செய்கின்றன. உள்நாட்டு சிவில் சமூக குழுக்கள் மற்றும் தொழில்களுடனான பரந்தளவு கலந்தாலோசனைகளை இந்த செயற்பாடு உள்ளடக்கும்.

குறித்து மேலும் அறிந்து கொள்வதற்கு: www.mcc.gov.